# நன்னெறி

**கடவுள் வாழ்த்து**

மின்னெறி சடாமுடி விநாயகனடி தொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

**பதவுரை:-** மின் எறி - மின்னல் போலும் ஒளியை வீசுகின்ற, சடாமுடி - சடை முடியையுடைய, விநாயகன் அடி தொழ- விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்குதலால், நன்னெறி வெண்பா நாற்பதும் வரும்- நன்னெறி என்னும் நூலின் நாற்பது வெண்பாவும் வரும்.
ஏ - ஈற்றசை.

(1) பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

**பதவுரை:-** பிறர்க்கு உதவி செய்யார் - பிறருக்கு உபகாரஞ் செய்யாத, கருங்கடல் நீர் - கரிய கடலின் நீரை, புயல் சென்று முகந்து - மேகமானது போய் மொண்டு வந்து, பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும் - பிறருக்குப் பெய்து கொடுக்கும். (அதுபோல) பிறர்க்கு உதவி செய்யார் பெருஞ் செல்வம் - பிறருக்கு உபகாரஞ் செய்யாதவருடைய பெரிய செல்வமானது. வேறு - பிறதேயாயினும், பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம் - பிறருக்கு உபகாரஞ் செய்பவருடைய செல்வமாகும்.

(2) உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்தலரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தலரிதோ? விளம்பு.

**பதவுரை:-** உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் - மனத்தைத் தன்வயத்த தாக்கிக் கொண்டு எழுந்து வளர்கின்ற கோபத்தை காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க - அடக்கிக் கொள்ளுகின்ற குணமே அருமையாகிய குணம் என்று அறியக் கடவாய். வெள்ளம் தடுத்தல் அரிதோ - (பெருகி வருகின்ற) வெள்ளத்தை (க் கரைகட்டி)த் தடுத்தல் அரியதோ, தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ - முன் கட்டப்பட்டிருந்த பெரிய கரையை உடைத்து (அதனுள் அடங்கியிருந்த வெள்ளத்தைப் புறத்திலே செல்ல) விடுத்தல் அரியதோ, விளம்பு - நீ சொல்வாயாக.

தான் - அசை.

(3) இன் சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன் சொலா லென்றும் மகிழாதே - பொன் செய்
அதிர் வளையாய்! பொங்காதழற்கதிராற் றண்ணென்
கதிர் வரவாற் பொங்குங் கடல்.

**பதவுரை:-** பொன் செய் அதிர் வளையாய் - பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களையுடையவளே, கடல் தண்ணென் கதிர் வரவால் பொங்கும் - கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரன் வருகையினால் பொங்கும். (அதுவன்றி) அழற் கதிரால் பொங்காது - வெம்மை பொருந்திய கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலே பொங்காது; (அது போல) இரு நீர் வியன் உலகம் - பெரிய கடல் சூழ்ந்த பரந்த உலகத்திலுள்ளவர்கள், இன் சொலால் அன்றி வன் சொலால் என்றும் மகிழாது - இன்சொல்லினாலல்லாமற் கடுஞ் சொல்லினால் எந்நாளும் மகிழ்ச்சியடையார்.

ஏ- அசை

(4) நல்லார் செயுங் கேண்மை நாடோறும் - நன்றாகும்
அல்லார் செயுங் கேண்மை யாகாதே - நல்லாய் கேள்!
காய் முற்றின் தின் தீங்கனியாம் இளந் தளிர் நாள்
போய் முற்றின் என்னாகிப் போம்.

**பதவுரை:-** நல்லாய் கேள் - நற்குணத்தையுடையவளே கேட்பாயாக, காய் முற்றின் தின் தீம் கனி ஆம் - காயானது (நாள் சென்று) முற்றினால் தின்னுதற்குரிய இனிய கனியாகும். இளம் தளிர் நாள் போய் முற்றின் என் ஆகிப் போம் - இளந்தளிரானது நாள் சென்று முற்றினால் யாதாகிப் போம், (அதுபோல) நல்லார் செயும் கேண்மை நாடோறும் நன்று ஆகும் - நல்லோர் செய்யும் நட்பானது நாள்தோறும் நன்றாக வளரும், அல்லார் செயும் கேண்மை ஆகாது - அல்லார் செய்யும் நட்பானது நல்லதாகாது.

"ஔவை அமுதம் எந்நாளும் இனிக்கும்"

## செயற்பாடு

* "ஔவையார் பாடல்கள்" என்னும் நூலை நூல்நிலையத்தில் இருந்து பெற்று அதிலுள்ள பாடல்களைப் படியுங்கள்.